
# கல்வெட்டு

திருவள்ளுவராண்டு 2023 (ஆங்கீரச ஆண்டு) வைகாசித் திங்கள்



திருவானைக்காவில் கிடைத்த கோபியர் சிற்பம்

(கட்டுரை 34-ஆம் பக்கம்)

காலாண்டிதழ் - 34 ★ ( 1992, மேத் திங்கள் ) விலை ரூ. 1-50

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை

உள்ளே.........


பக்கம்

1. தொண்டூர் தமிழ் - பிராமிக் கல்வெட்டு
— மா. சந்திரமூர்த்தி ... 1

2. கொற்கையும் அயல் நாட்டுறவும்
— புலவர் என். தியாகராஜன் ... 4

3. கங்கைகொண்ட சோழபுரம் அகழ்வைப்பகக் கல்வெட்டுகள்
— கா. நெடுஞ்செழியன் ... 8

4. தளி - ஆய்வு அறிக்கை
— க. செல்வராஜ் ... 13

5. அச்சுத மங்கலம் கல்வெட்டுகள்
— ச. செங்கல்வராயன் ... 15

6. நாகொண்ட பாளையம்
— தி. சுப்பிரமணியன் ... 23

7. கரூர் வட்டத்தில் களஆய்வு
— இர. ஜெயராமன் ... 25

8. பேரூரில் அரிய சிற்பங்கள்
— இரா. ப. கருணானந்தன் ... 30

9. An Exquisite Bronze Image of Tiruvanaikka
— Natana. Kasinathan ... 34

# தொண்டூர் தமிழ்-பிராமிக் கல்வெட்டு

**திரு. மா. சந்திரமூர்த்தி,**
பதிவு அலுவலர்

தொண்டூர் செஞ்சியிலிருந்து 15 கிலோ மீட்டர் தொலைவில் சின்னகரம், சோழகுணம் ஆகிய கிராமங்களை அடுத்து அமைந்துள்ள சிற்றூர்.

இவ்வூர் ஏரியை அடுத்து ஒலக்கூர் பசுமலை எதிரில் தொண்டூர் குன்று உள்ளது. இக்குன்று தென்னாற்காடு மாவட்டம் செஞ்சி வட்டமும், சம்புவராயர் மாவட்டம் வந்தவாசி வட்டமும் இணையும் இடத்தின் அருகே அமைந்துள்ளது. இக்குன்றில் இரண்டு இடங்களில் குகைத்தளங்களும், சமணப்படுக்கைகளும் உள்ளன. குகைத்தளம் உள்ள இம்மலையை 'பஞ்சனாப்பாடி-குன்று' என்றும் பஞ்சனாபடி குன்று' என்றும் ஊரார் அழைக்கின்றனர்.

இவ்வூரின் முதல் குகைத்தளம் நிலப்பரப்பிலிருந்து சுமார் 60 அடி உயரத்தில் அமைந்து காணப்படுகிறது. இக்குகைத்தள முகப்பு சுமார் 5 மீட்டர் உயரம் உடையது. இதனை அடைய 28 சிறிய படிகள் உள்ளன. முகப்பு வாயிலைத் தாண்டி உள்ளே சென்றால் ஒரு கல் மேடை மீது சமணப் படுக்கைகள் தலைத் திண்டுகளுடன் செதுக்கப்பட்டு காணப்படுகின்றன. இப்படுக்கைகளில் இடப்புறம் 2 மீட்டர் தூரத்தில் கல்பாறையில் பார்சுவநாதர் உருவம் இருந்த கோலத்தில் புடைப்புச் சிற்பமாக உள்ளது. இதனை இப்பகுதிவாழ் மக்கள் 'நயினார் கோயில்' என்று அழைத்து வருகின்றனர்.

இச்சமணப்படுக்கைகளின் கால்மாட்டின் கீழ் உள்ள சரிவில் சுமார் ஒரு மீட்டர் தூரத்தில் இரண்டு வரிகளில் தமிழ் பிராமிக் கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்டு காணப்படுகின்றன.

அக்கல்வெட்டு வாசகம் வருமாறு :

1. ஸங்காயிபன் (அ) (தடாகாயிபன்) ஏவ அகள் ஊரறம்
2. மோசி செயித அதிடானம்

இதனை ஸங்காயிபன் (அ) தடாகாயபன் ஏவ அகள் ஊர் அறம்மோசி என்பவன் அதிட்டானம் (படுக்கை) செய்வித்ததைக் குறிக்கிறது. இக்கல்வெட்டின் முதல் வரியில் 11-வது எழுத்து மற்றும் 14-வது எழுத்து ஆகியவற்றின் வரி வடிவங்கள் தெளிவின்றி காணப் படுகின்றன. இக்கல்வெட்டில் அகள் ஊர் என்று குறிக்கப்படும் இவ்வூர் இன்றும் இக்குகைத்தளம் அமைந்துள்ள தொண்டூருக் கருகில் அகலூர் என்று அழைக்கப்படும் ஊராக இருக்கலாம்.

இப்படுக்கைகளை செய்யும்படி மோசி என்பவனுக்கு ஆணை யிட்ட ஸங்காயிபன் அல்லது தடாகாயிபன் என்னும் பெயரைப் போலவே மதுரைக்கருகில் உள்ள ஆனைமலை தமிழ்க் கல்வெட்டில் அரட்டகாயிபன் என்ற பெயரும், புகளூருக்கருகில் உள்ள ஆறு நாட்டார் மலையிலும், திருச்சி குன்றிலும் செங்காயபன் என்ற பெயர் காணப்படுவது இங்கு நினைவு கூறத்தக்கது.

சங்க இலக்கிய பாடல்களைப் பாடிய புலவர்களுள் மோசி கீரனார், மோசி சாத்தனார் ஆகிய பெயர்கள் காணப்படுகின்றன. மோசி என்பது ஊர்ப் பெயராகவோ அல்லது ஆள் பெயராகவோ இருக்கலாம். இங்கு 'மோசி செயித' என்று வருவதால் மோசி என்பது சங்க காலத்தில் மக்கள் பெயராகவே வழங்கி வந்திருக்கிறது. இத்தகைய பெயர் சங்ககால இலக்கியங்களில் மட்டுமே பரந்து வழங்கி வருவதாலும் பிற்காலத்தில் வழக்கின்மையாலும் இப்பெயர் தாங்கிய கல்வெட்டு சங்க காலத்தைச் சேர்ந்ததே என்பது உறுதியாகிறது. எனவே இக்கல்வெட்டின் காலத்தை கி.மு. 3 அல்லது 2-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாக அறிய முடிகிறது. இதன் எழுத்தமைதியும் இதற்குத் துணை புரிகிறது.

இக்கல்வெட்டின் முடிவில் மூன்று பக்கக் கோடுகள் குறிக்கப் பட்டுள்ளன. இவை சமண சமயத் தொடர்புடைய குறியீடுகளாக இருக்கலாம். ஒரு வேளை மூன்று படுக்கைகளைக் குறிப்பதாகவும் கொள்ளலாம்.

இப்படுக்கைகளின் அருகில் உள்ள பார்சுவநாதர் சிலை கி.பி. எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக இருத்தல் வேண்டும். இன்றும் இங்குள்ள தெய்வத்தை தொண்டூரைச் சேர்ந்த அகலூர், பென்னகர் ஊரவர்கள் முக்கிய தெய்வமாக வழிபடுகின்றனர். இக்கோயிலை இவர்கள் நயினார் கோயில் என்று அழைத்து வருகின்றனர்.

எனவே சங்க காலம் முதல் இன்று வரை இப்பகுதி சமணத் தலமாக விளங்கி வருகிறது என்பது குறிப்பிடத் தக்கது.

இக்குன்றின் மற்றொரு பகுதியில் இரண்டாம் குகைத்தளம் அமைந்துள்ளது. இங்கு முகப்பு வாயிலை அடுத்து ஐந்து சமணப் படுக்கைகள் வரிசையாக வெட்டப்பட்டுள்ளன. இவை ஒவ்வொன்றும் 1·75 செ. மீ. நீளமும் 44 செ. மீ. அகலமும் உடையவை. இங்குள்ள படுக்கைகளில் முதல் மூன்று படுக்கைகள் தலை வைத்து படுக்கும் நிலையில் கல் திண்டுகளுடன் உள்ளன. இப்படுக்கைகள் சமமாக செதுக்கப்படாமல் ஒன்றில் பக்கவாட்டில் ஒன்றாகவும் சரிவாகவும் செதுக்கப்பட்டுள்ளன. இப்படுக்கைகளிலிருந்து குகையின் விதானம் 85 செ.மீ. முதல் ஒரு மீட்டர் உயரம் வரை உயரம் உடையவை. இங்குள்ள குகையிலும் படுக்கைகள் அருகிலும் எழுத்துக்கள் காணப்படவில்லை. இப்பகுதியை அடையும் வழியில் பாறைச் சரிவுகளின் இடையே வேம்பு, வேப்பிலை மரங்களும் உன்னிக் காரைச் செடிகளும், சூரைப் புதர்களும், மஞ்சிப்புல்லும் அடர்ந்து காணப்படுகின்றன.

குறிப்பு

இத்தமிழ்ப் பிராமிக் கல்வெட்டு கட்டுரை ஆசிரியரால் 9-10-1991 அன்று கண்டுபிடிக்கப்பட்டது.

---

## புங்கனூர்

வடஆற்காடு மாவட்டம், ஆற்காடு வட்டம், புங்கனூர் என்ற இடத்தில் பழமையான கல்வெட்டு ஒன்று உள்ளது. இவ்வூரின் தென் பகுதியில் உள்ள குன்றின் அடிப்பகுதியில் ஒரு பழமையான மண்மேடான குடியிருப்புப்பகுதி இருப்பது தெரிந்தது. அங்கு கிடைத்த பானை ஓடுகள் முதலிய தடயங்களை ஆய்வு செய்ததில் அவைகள் சோழர் காலத்தவை என அறிய முடிந்தது. அம்மண் மேட்டிற்கு சற்றே வடபுறம் மகாதேவர் என்ற ஈஸ்வரன் கோயில் உள்ளது. அக்கோயிலின் ஜகதிப்படையில் சோழப் பெரு மன்னன் இராசராசனின் கல்வெட்டு அம்மன்னன் மெய் கீர்த்தியுடன் காணப்படுகிறது. அக் கோயிலுக்கு நந்தா விளக்கு எரிக்கவும் திருவமுது படைக்கவும் நிலம் தானம் விட்ட செய்தியை அக் கல்வெட்டு கூறுகின்றது.

இதன் தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க

# கொற்கையும் அயல்நாட்டுறவும்

புலவர். என். தியாகரராஜன்,
பூம்புகார்.

பண்டைக் காலத்தில் தமிழகத்தை ஆண்ட சேர சோழ பாண்டிய மன்னர்கள், தமது வலிமை மிக்க கடற்படையால் ஈழம், அந்தமான், நக்கவரம், கடாரம், மலையம், சிங்கபுரம், சாவகம், காம்போஜம் போன்ற நாடுகளை வெற்றி கொண்டு அங்கெல்லாம் வாணிகத் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டனர். முசிறி, கொற்கை, புகார் போன்ற புகழ் பெற்ற கடற்றுறைப்பட்டினங்களுக்குக் கடல்வழி வாணிபம் செய்ய மேலை நாட்டினர் வந்ததைப் பழந்தமிழ் இலக்கியங்களின் வழியும் அயல் நாட்டினரின் குறிப்புகளில் இருந்தும் தெரிந்து கொள்ள முடிகிறது.

பாண்டியர்களுக்குச் சிறந்த துறைமுகமாக விளங்கியது கொற்கை. பெரிப்புளுசு நூலாசிரியரும், வானநூல் வல்லுநரான தாலமி என்ற யவனரும் கொற்கைத் துறைமுகத்தைப் பற்றிச் சிறப்பாகத் தம் நூல்களில் குறிப்பிட்டுள்ளார்கள்.

கிறித்துவ நூற்றாண்டிற்கு முன்பிருந்தே சிறந்த துறைமுகப் பட்டினமாக விளங்கியது கொற்கை. முற்காலந்தொட்டே பொனீசியர், எகிப்தியர், சுமேரியர், கிரேக்கர், யவனர், உரோமர், அராபியர், பாரசீகர் போன்ற மேற்கு நாட்டவர்களும், பர்மியர், சீனர், காழகர், சாவகர், காம்போஜர் போன்ற கிழக்காசிய நாட்டவரும், கொற்கை போந்து வாணிகம்பேணி வந்தனர் என்பதை அயல்நாட்டார் குறிப்பிலிருந்து அறிகிறோம்.

பாண்டியர் அரசவையில் உரோமர், கிரேக்கர், அராபியர், சாவகர், பர்மியர், சீனர் போன்ற எட்டு நாடுகளில் உள்ள எட்டு மொழி பேசும் அரச தூதுவர்கள் இருந்தார்கள் என்பார் இராகவன் அவர்கள். பாண்டியர்களும் தம் தூதுவர்களை, உரோமப் பேரரசர்கள் அகஸ்டசு (கி. மு. 63 - கி.பி.74) கிளாடியசு, நீரோ (கி.பி. 54-68) ஆகியோர் அவைக்கு அனுப்பியுள்ளனர்.

முதலில் இந்தியாவினின்று ஐரோப்பாவிற்கு அரிசி முதல் யானைத் தந்தம் வரை ஏற்றுமதி செய்த வாணிகம், பொனீசியர்கள், பாரசீகர்கள் கைகளில் இருந்தது. பின்னர் கிரேக்கர் கொற்கையிலிருந்து அரிசியைக் கொள்முதல் செய்து ஐரோப்பாவில் பல இடங்களுக்கும் கொண்டு சென்றனர். கிரேக்க மொழியில் அரிசி, ''ஒரிஸ்சா'' என்றும், இஞ்சி ''ஜிஞ்சி'' என்றும், கருவாப்பட்டை ''கார்ப்பியன்'' என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. கிறித்துவ ஹோலி பைபிளில் இருந்து எருசலேமில் சாலமன் கட்டிய கோயிலுக்கு உவரித் துறைமுகத்திலிருந்து (உவரி கொற்கைக்கு அருகில் உள்ளது) அகிற் கட்டை, ஆட்டுமயிர், மயிலிறகு, குரங்கு, தந்தம் முதலியவற்றை வாங்கிச் சென்றனர் என்பதை அறியலாம். இறகு ''தோய்யில்'' என்றும், குரங்கு ''கபிம்'' (கவி) என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. கொற்கை துறைமுகத்திலிருந்து தமிழ் வாணிகர் முத்து, மரகதம், மாணிக்கம், பவளம், வைடூரியம் முதலிய மணிகளையும், தந்தம், மயில், குரங்கு, சந்தனம், கருங்காலி, தேக்கு போன்ற உயர்ந்த பொருள்களையும், மஸ்லின் துணி பட்டுத்துணி, சாயம், சங்கு, சிப்பி, வாசனைப் பொருள்கள் முதலியவற்றையும் பெரும் அளவில் ஏற்றுமதி செய்து வந்தனர்.

பினீசியரின் துறைமுகமாகிய அரையர்சிடன் என்னும் பட்டினத்திலிருந்து பயணத்தைத் தொடங்கிச் செங்கடலைக் கடந்து, இந்துமாக் கடலின் கரையை அடைந்து முத்து, மஸ்லின் ஆடை, பட்டு, மிளகு, தேக்கு மரம், மயில் தோகை முதலியவற்றைத் தம் பொற்காசுகளைக் கொடுத்து வாங்கிச் சென்றனர். இவ்வாறு நடைபெற்ற வாணிகத்தில், தமிழர்களிடம் முத்தும், மணியும், மிளகும், பட்டும் பெறுவதற்கு எண்ணற்ற பொற்காசுகளைக் கொடுத்து வாங்கி வருவதைக் கண்ட உரோம வரலாற்று ஆசிரியர் பிளினி என்பார் தம் நாட்டுச் செல்வம் உரோம மன்னர், உயர் குடிமக்கள், பெண்மணிகள் ஆடை, அணிமணி, இன்பப் பொருள்களுக்குச் செலவு செய்த பொன்னால் உரோம உலகு வறுமையுற்றும். தமிழகம் வளமுற்றும் வந்தது கண்டு வருத்தமுற்றார். ஆண்டு தோறும் சீனா, தென்னாடு, அராபியா ஆகிய நாடுகளுக்கு உரோமர் வாணிகத்துக்காக அனுப்பிய 100 கோடி செஸ்டர்களில் பாதி தென்னாட்டுக்குச் சென்றதாக அவர் கணித்துள்ளார்.

யவனர்கள் தங்கள் நாட்டு மதுவினைச் சாடிகளிலும், தோற் குப்பிகளிலும் அடைத்துக் கொண்டு வந்து விற்பதோடு தமிழ் நாட்டில் கிடைத்த மதுவினைக் குறைந்த விலையில் வாங்கித்

தங்கள் நாட்டிற்கு எடுத்துச் சென்றனர். மதுவும், வாசனைப் பொருட்களும் யவனர்க்குச் சிறந்த போகப் பொருளாக விளங்கின. கடற்றுறைப் பட்டினத்தில் பெரிய பண்டகசாலைகள் இருந்தன. ஏற்றுமதிக்குரிய பொருட்களும், இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களும், மலை போல் குவித்து அழகுற அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. எல்லாப் பொருட்களையும், சோதனை செய்து பின்னர் பாண்டிய அரசின் இணைகயல் முத்திரை பொறிக்கப்பட்டு ஏற்றுமதித் தீர்வையும் இறக்குமதித் தீர்வையும் வசூலிக்கப்பட்டது. சுங்கச் சாவடி அருகில் கலங்கரைவிளக்கமும் இருந்தது. வாணிகத்தின் பொருட்டு அயல்நாட்டினர் குடியேறிய இடங்கள் யவனச்சேரி, வெள்ளையர் இருக்கை போன்ற பெயர்களில் அழைக்கப்பட்டது. பூம்புகாரிலும், வெள்ளையன் இருப்பு, ஈரான்பாளையம் என்ற பெயரில் இன்றும் ஊர்கள் உள்ளன. யவனர்கள் கொற்கையிலும், மதுரையிலும் அரண்மனையில் காவலராகப் பணி புரிந்த செய்தியையும் இலக்கியங்கள் வழி அறிகிறோம்.

யவன நாட்டிலிருந்து தச்சர்களும் வணிகர்களும் தமிழகத்திற்கு வந்து, தமிழ் மன்னர்களின் தலைநகரங்களிலும், துறைமுகப் பட்டினங்களிலும் குடியேறி வாழ்ந்து வந்தனர் என்பதைச் சோனகச்சேரி, யவனச்சேரி போன்ற பெயர்களில் இருந்து அறியலாம்.

அகஸ்டசு கி.மு. 30-ஆம் ஆண்டில் எகிப்தை வென்ற பின்னர் இந்தியாவிற்கும் உரோம நாட்டிற்கும் இடையே நேரடியாகக் கடல் வாணிகம் செய்ய வழிகண்டான். இதன் பயனாகப், பாண்டிய மன்னனோடு வாணிபம் வளம் பெற்றது. இதனால் கொற்கையில் இறக்குமதியான பொருட்களை விட ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களே அதிகம். கி. மு. 25-ஆம் ஆண்டில் ஓர்மசிலிருந்து இந்தியாவிற்கு 120 பெரிய கப்பல்கள் சென்றதைத் தாம் கண்டதாகத் திராபோ என்ற அறிஞர் கூறுகிறார்.

கி. மு. 1400-ஆம் ஆண்டில் வாழ்ந்த எத்தினிய நாட்டு மன்னர் கடல் வாணிக உறவினால் பாண்டிய நாட்டு மன்னர்களோடு நட்புரிமை கொண்டு தங்கள் பெயரோடு "பாண்டியோன்" என்ற பெயரைச் சூட்டிக் கொண்டனர். கருங்கடற் பகுதியில் கட்டப்பட்ட வாணிக நகரத்திற்குக் "கொல்கை" (கொற்கையின் பெயரால்) "கொல்கிசு" எனப் பெயரிட்டனர்.

கொற்கை சிறப்புற்றதே முத்தை முதன்மையாகக் கொண்டேயாகும். கொற்கையில் கிடைத்த முத்துகள் உயர்ந்த ஆணி

முத்துகள் ஆகும். இவையே உலகில் உள்ள எல்லாச் சந்தைகளிலும் சிறந்த முத்துகளாகச் சிறப்புப் பெற்றன. தாலமி போன்ற யவன ஆசிரியர்கள் இந்தக் கொற்கை முத்தே குவலயத்திலேயே உயர்ந்தது என்று குறிப்பிட்டுள்ளனர். வலம்புரிச் சங்குகளும் அதிகமாகக் கிடைத்தன. அதனால் சங்குவளையல்களும், மோதிரங்களும், காதணிகளும் அழகுற அமைக்கப்பட்டு ஏற்றுமதி செய்யப் பட்டன. எகிப்து நாட்டு அரசி கிளியோபாட்ரா தன் காதுகளிலும், கழுத்திலும் முத்துக் காதணியும், முத்துமாலையும் அணிந்திருந்தாள். அவள் அளித்த பெருவிருந்தில் உயர்ந்த முத்தை மதுவில் கரைத்து விருந்தினர்க்கு அளித்தாளாம். அவள் அணிந்திருந்த முத்துகளின் விலை மட்டும் 1,61,458 சவரன்கள் ஆகும் என்று குறித்துள்ளார்கள். மற்றும் பிளினி குறிப்பில் முத்துகள் தாமிரபரணித்தீவில் கிடைப்பதாகவும் பௌஸீனா அரசி முத்து, மரகதம், ஆகியன அணிந்திருந்ததாகவும், அந்த மணிகளின் விலை 4 கோடி செஸ்டர் மதிப்புடையது என்றும் குறிப் பிட்டுள்ளார்.

தமிழகத்திற்குக் கி.பி. 1292-இல் வந்த மார்க்கோபோலோ மாபாருக்கும் இலங்கைக்கும் இடையேயுள்ள வளைகுடாவில் முத்துக்குளிப்பதை மிக விரிவாகக் கூறியுள்ளார்.

ரோமாபுரியில் இருந்த வீனஸ் காதல்தேவதைக்குத் தமிழ் நாட்டு முத்துகளே காதணியாக விளங்கின. அந்தச் சிலைக்குச் சீசர் முத்தாடை வழங்கினான் என்றும், அரேபிய குதிரைகளைப் பாண்டியர்க்குக் கொடுத்து அதற்கு விலையாக முத்துகளைப் பெற்றுச் சென்றான் என்றும் கிளியோபாட்ராவுக்கு சீசர் இரண்டு முத்துகளைக் காதில் அணிந்து கொள்ளப் பரிசாக அளித்தான் என்றும் நவமணி என்ற நூலாசிரியர் டாக்டர் அ. அய்யூப் குறிப்பிட்டுள்ளார்.

சங்க காலத்திற்குப் பின் கொற்கையின் சிறப்பை எடுத்துக் காட்டும் சான்றுகள் நமக்கு அதிகமாகக் கிடைக்கவில்லை. இயற்கையில் ஏற்பட்ட மாற்றத்தால் கொற்கையில் இருந்த கடல்நீர் பின்வாங்கி 4 கல் தொலைவிற்கு மண்மேடிட்டுக் கப்பல்கள் வரும் வாய்ப்பை இழந்தது.

——

# கங்கை கொண்ட சோழபுரம் அகழ்வைப்பகக் கல்வெட்டுகள்

**கா. நெடுஞ்செழியன்**
காப்பாட்சியர்

**கங்கை** கொண்ட சோழபுரம் அகழ்வைப்பகத்தில் சோழர், பாண்டியர், நாயக்கர் காலக் கல்வெட்டுக்கள் மூன்று சேகரிக்கப் பட்டு பார்வைக்கு வைக்கப்பட்.டுள்ளன. இம்மூன்று கல்வெட்டுக் களும் தனித்தனி சிறப்புடையவை ஆகும். இனி அவற்றைப் பற்றிக் காண்போம்.

## 1. முதலாம் பராந்தகன் கல்வெட்டு

இக்கல்வெட்டு, திருச்சி மாவட்டம், உடையார் பாளையம் வட்டத்தில் உட்கோட்டை என்னும் கிராமத்தில், கீழ் மாளிகை மேடு என்று வழங்கப்படும் இடத்தில் கண்டு எடுக்கப்பட்டு, கங்கை கொண்ட சோழபுரம் - அகழ்வைப்பகத்திற்குக் கொண்டு வரப்பட்டு, பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

1. ஸ்வஸ்திஸ்ரீ மதிரை கொண்ட கோ
2. ப்பரகேசரி வர்மர்க்கு யாண்டு
3. இருபத்தி யிரண்டாவது மதிணாயகஞ்சை
4. ய்கின்ற நாரண மங்கல முடைய
5. யான் விண்ணபத்தினால் மூருவ
6. ந்தப் பெருந்தச்சன் வாய் கேழ்வி
7. யில் தஞ்சாவூர் இருமடி சோ
8. ழப் பெருந்தெருவில் ஏறின வளஞ்
9. சியர் ஐநூற்றுவர்க்கு அருளிச்
10. செய்த அருளினால் பெற்ற பரிச
11. மாவது வெட்டியும் வேதனை
12. யும் இறையும் எச்சோறும் இ
13. றாததாக நிலைத் தளமும் பேட்டை
14. த்தாவளமும் இவகளேய் பெற்று
15. வதாகவும் என்றமர எப்பேர்

16. பட்ட கோவும் புக்குந
17. லியித தாகவும் இப்பரிசு
18. எப்பேர்ப்பட்ட ஸ்ர்வபாகம்
19. சந்திராதித்தவர்க்கு அருளிச்
20. செய்..........................
21. ..............................
22. ..............................

கடைசி இருவரிகள் சிதைந்துள்ளன. அத்துடன் கல்வெட்டும் முடிவடைந்து விடுகிறது.

**கல்வெட்டுச் செய்திகள்**

முதல் பராந்தக சோழனது இருபத்தியிரண்டாவது ஆட்சி யாண்டில் தஞ்சாவூர் இருமடி சோழப் பெருந்தெருவிற்கு வந்து குடி யேரின வளஞ்சியர் ஐநூற்றுவர்க்கு இடம் வேண்டுமென்று மூவேந்தப் பெருந்தச்சன் என்பவன் நாரண மங்கலமுடையான் என்னும் அரசனது மதின் நாயகத்திடம் நேரிடையாகக் கூற அதனைக் கேட்ட மதின் நாயகம் அரசனிடம் மனு செய்து கொள்ள, அரசனும் அதற் கிசைந்து அவர்களுக்கு வசிப்பதற்குரிய இடத்தையும், வாணிகத் தொழில் செய்வதற்குரிய தொழிற்பேட்டையும் வெட்டி, வேதனை, இறை, எச்சோறு முதலாய வரி நீக்கி பரிசிலாக அளித்துள்ளான் என்ற செய்தி குறிக்கப்படுகிறது.

எனவே கங்கை கொண்ட சோழபுரத்திற்கு முதலாம் இராசேந்திர சோழன் தலைநகரை மாற்றுவதற்கு முன்பாகவே கி.பி. பத்தாம் நூற்றாண்டில் கங்கை கொண்ட சோழபுரம் ஓர் சிறந்த நகராகவும், சிறந்த வாணிபத் தலமாகவும் இருந்திருக்க வேண்டும் என்பது இக்கல்வெட்டினால் உணர முடிகிறது.

**2. சுந்தரபாண்டியன் கல்வெட்டு**

திருச்சி மாவட்டம் உடையார் பாளையம் வட்டம், ஜெயங் கொண்ட சோழபுரத்தில், பேருந்து நிலையத்தின் அருகே மேற்குத் திசையில் அமைந்துள்ள தற்போது "ஆவேரி" என்று அழைக்கப் படும் ஏரியில் இக்கல்வெட்டுத்தூண் புதையுண்டு நின்றிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. தற்போது கங்கை கொண்ட சோழபுரம் அகழ்வைப்பகத்தில் பொது மக்களின் பார்வைக்கு வைக்கப் பட்டுள்ளது. தூணின் மூன்று பக்கங்களிலும் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. கல்வெட்டின் மேலே மூன்று பக்கமும் விளக்கு உருவமும் உடுக்கை வடிவமும் பொறிக்கப் பட்டுள்ளது.

## கல்வெட்டு

| முதல்பக்கம் | 2-ம் பக்கம் | 3-ம் பக்கம் |
|---|---|---|
| 1. ஸ்வஸ்திஸ்ரீ | 1. ண்டசே | 1. ல் செய் |
| 2. கோச்ச | 2. சாழ ப் | 2. ய நினை |
| 3. டயபன்மர் | 3. பெரா | 3. த் தார் |
| 4. திரிபுவன | 4. வி அக | 4. உண்டா |
| 5. ச் சக்கர | 5. யில் | 5. கில் நக |
| 6. வத்திக | 6. நன்னை | 6. ரத்து |
| 7. ன் ஸ்ரீசு | 7. யூருடை | 7. ரோகி |
| 8. ந்தரபா | 8. யார் தி | 8. நம்மி |
| 9. ண்டிய | 9. ருவிக் | 9. லொ |
| 10. தேவற் | 10. கிரமந் வெ | 10. ருத்த |
| 11. குயாண் | 11. ட்டின | 11. ரல்லர் |
| 12. டு ம௨வ | 12. தன்ம | |
| 13. து வை | 13. க்குள | |
| 14. ய் காசி | 14. த்தில்யி | |
| 15. மாத மு | 15. றைத்த | |
| 16. தல் செ | 16. ல் நீர்ப | |
| 17. யங் கொ | 17. ரச்சுத | |

இக்கல்வெட்டு "ஸ்வஸ்தி ஸ்ரீ" என்னும் மங்கலச் சொல்லுடன் தொடங்குகிறது. பாண்டிய மன்னனான கோச்சடய பன்மர் திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீசுந்தர பாண்டியனின் 12-வது ஆட்சி யாண்டில் இக்கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. சோழ நாட்டில் சோழராட்சி வலிமை குன்றியிருந்த காலத்தில் பாண்டிய மன்னர்கள் சோழ நாட்டில் வந்து சில தீமைகளையும், நன்மைகளையும் செய்துள்ளனர். அது போல சுந்தரபாண்டியனின் அரசியல் அதிகாரிகளும் சில நன்மைகளையும் செய்துள்ளனர். ஜெயங் கொண்ட சோழபுரத்தில் தற்போது இக்கல்வெட்டு உள்ள ஏரி சோழர் காலத்திலேயே வெட்டப்பட்டதாகும். இதனை இச்சுந்தர பாண்டியன் "ஜெயங் கொண்ட சோழப் பேராவி' என்று குறிப்பிடு வதன் மூலம் உணரலாம். நாளடைவில் இவ்வேரி நன்கு பராமரிக்கப் படாமையால், நீர் வருவது குறைந்து விட்டது. இதனைக் கண்ட ஜெயங்கொண்டத்திற்கு அருகிலுள்ள நன்னையூர் என்ற ஊரைச் சேர்ந்த "திருவிக்கிரமன்" என்பவன் சுந்தரபாண்டியனின் 12-வது ஆட்சியாண்டில் இவ்வேரிக்கு தண்ணீர் வரும் தலைமடையில்

(முகப்பில்) மேடு பள்ளங்களை வெட்டி, சமன் படுத்தி நன்றாகத் தண்ணீர் வருவதற்கு ஏற்பாடு செய்தான். பின்னர் அந்த நீரை எக்காரியத்திற்காக பயன் படுத்த வேண்டும் என்பதையும் கல்வெட்டில் பொறித்து ஏரியில் நட்டுவித்தான். இவ்வாறு வெட்டப்பட்ட குளத்தில் உள்ள நீரை நகரத்தில் உள்ள மக்கள் குடி நீருக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும். அது தவிர குளத்திலிருந்து ஏற்றம் வைத்து நீர் இறைத்தல், நீர்பாசனம் செய்தல் போன்ற காரியங்களுக்குப் பயன்படுத்தக் கூடாது என்றும் அவ்வாறு மீறி செய்பவர்கள் நகரத் துரோகிகள் என்றும், நகரத்தில் உள்ள ஊர்ச் சபையிலிருந்து ஒதுக்கி வைக்க படுவார்கள் என்றும் இக்கல்வெட்டு கூறுகிறது.

### 3. நாயக்கர் கால கல்வெட்டு

கங்கை கொண்ட சோழபுரம் அகழ்வைப்பகத்தில் கி.பி. 18-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த நாயக்கர் காலக் கல்வெட்டு ஒன்றும் உள்ளது. இக்கல்வெட்டு ஊருக்கு அருகில் உள்ள ஒரு ஏரியில் துணி துவைக்கும் கல்லாகப் பயன்படுத்தப்பட்டு வந்தது. தற்போது அகழ்வைப்பகத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. கல் மிகவும் தேய்ந்து விட்டதால் சரியாகப் படிக்க இயலவில்லை.

#### கல்வெட்டு

1. ஸ்ரீமத் துபாக் குல கவு
2. ணம நாயகர் கெங்ை
3. க கொண்ட உ கங்ற
4. ...க்கு குடுத்த சறுவ
5. மானியம் சுபாநு
6. வருஷம் ஆடி மீ
7. கட்டளையிட சறுவ
8. மாமிய
9. ............... ...
10. கூடில்...கொ
11. உள்பட சறுவம
12. ாணியமாக அநு
13. பவித்துக் கொள்ள
14. ஒ உ இதுக்கு......
15. யாதொருவர்
16. ...........
17. மாதா பிதாவைக்
18. கங்கைக் கரையிலெ
19. கொன்ன தொஷ
20. த்திலெ போகக் கடவந
21. ல்

இக்கல்வெட்டில் கங்கை கொண்ட சோழபுரம் என்ற ஊர் ''கங்கை கொண்டம்'' என்று சுருக்கமாகப் பெயரிட்டு வந்தது குறிப்பிடபடுகிறது. தற்பொழுதும் இவ்வூரை ''கங்கை கொண்டான்''

என்று குறிப்பிடுவது நோக்கத்தக்கது. கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் திருச்சியில் இருந்தது பாக்குல கவுணம நாயக்கர் என்பவர் சுபாநு வருடம் ஆடி மாதம் கங்கை கொண்ட சோழபுரத்திலுள்ள ..........என்பவருக்கு நிலம் சறுவ மானியமாகக் (முழுச் சுதந்திர மாக) - கொடுக்க கட்டளையிட்டதை ஏற்றுப் பின் கல்வெட்டிக் கொடுத்ததாகவும். இவ்வாறு சறுவ மானியமாக விடப்பட்ட நிலத்தை அவன் சுதந்திரமாக அனுபவித்துக் கொள்ளவும் உரிமை வழங்கப்பட்டதாகவும் கூறுகிறது. அவ்வாறு வழங்கப்பட்ட நிலத்தில் யாரேனும் ஒருவன் அவனுக்குத் தீங்கு செய்வானாயின் அவர்கள் இவ்வுலகில் மாதா பிதாவைக் கங்கைக் கரையிலே கொன்ற தோஷத்தை அனுபவிக்கக் கடவார்கள் என்றும் கூறுகிறது.

மூன்று கல்வெட்டுக்களானாலும் ஒவ்வொன்றும் அதற்குரிய தனி வரலாற்றுச் சிறப்புடன் விளங்குவது குறிப்பிடத்தக்கது.

---

புங்கனூர் மூன்றாம் பக்கத் தொடர்ச்சி

இக் கோயிலின் அருகில் உள்ள ஓர் கல்லில் கி.பி. 865 முதல் 906 வரை ஆட்சி செய்த பல்லவ மன்னன் நிருபதுங்கனின் பதினேழாம் ஆட்சியாண்டு கல்வெட்டு ஒன்று உள்ளது. இக்கல்வெட்டு கி.பி. 882-ல் வெட்டப்பட்டிருக்கலாம். இக்கல்வெட்டு முழுவதும் கிடைக்காமல் முதல் ஆறு வரிகள் முழுமையாகவும், ஏழாவது வரி பாதியாகவும் கிடைக்கின்றது. அதன் பிறகு உள்ள கல்வெட்டுப் பகுதி உடைக்கப்பட்டு வேறு இடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்ட தாக உள்ளூர் மக்கள் கூறினர். தொடர்ந்து தேடியும் கல்வெட்டின் மீதிப் பகுதி கிடைக்கவில்லை. கிடைத்தவரை உள்ள கல்வெட்டு பின்வருமாறு உள்ளது.

1. ஸ்வஸ் ஸ்ரீ கோவிசைய
2. நிருபதுங்க விக்கிரம
3. பருமற்கு யாண்டு பதி
4. னெழாவது புன்கனூ
5. ர்ப் பாகர் அரிகண்டணூர்
6. பறிக் குட்ட (பு) ஞ் செய்
7. . . . த கிணறுந் தோ

என உள்ளது.

**மா. கலைவாணன்**
காப்பாட்சியர், ஆற்காடு

# தளி - ஆய்வு அறிக்கை

**க. செல்வராஜ்**
தொல்லியல் அலுவலர்

தர்மபுரி மாவட்டம், ஓசூர் வட்டம், ஓசூரில் இருந்து சுமார் 26 கி.மீ. தொலைவில் "தளி" என்ற இயற்கையான கிராமம் அமைந்துள்ளது. இக்கிராமத்தை "சிறிய இங்கிலாந்து" என்று அழைப்பது ஆங்கிலேயர் காலத்து வழக்கம். ஏனெனில் இங்கு சூழ்ந்துள்ள தட்பவெப்பநிலை மிகவும் கவரக்கூடிய ஒன்று. எனவே தான் இதனை அவ்வாறு குறிப்பிட்டிருக்க கூடும்.

## நாகொண்ட பாளயம்

இப்பகுதி ஓர் பாளயமாக திகழ்ந்துள்ளது என்பதை அறிய முடிகின்றது. இவ்வூர் தளியில் இருந்து சுமார் 4 கி மீ. தொலைவில் உள்ளது. இங்கு தொட்டைய குடி என்ற கோயில் உள்ளது. இக்கோயில் அண்மைக் கால கட்டிடமாக தோன்றுகின்றது. இருப்பினும் இங்கு மிகவும் சிறப்பு வாய்ந்த தடயம் ஒன்று இருப்பதை காண முடிந்தது. அவையாவன இக்கோயிலைச் சுற்றிலும் 54 நடுகற்கள் தெற்கு, வடக்கு, மேற்கு பகுதிகளில் வரிசையாக நிறுத்தி புதைக்கப்பட்டு உள்ளது. இது போன்று 54 நடுகற்கள் ஒரே இடத்தில் காணப்படுவது இதுவே முதன் முறையாகும்.

தர்மபுரி மாவட்டத்தில் நடுகற்கள் என்பது மிகவும் சிறப்பு வாய்ந்த இடத்தை பெற்றுள்ளது. தமிழகத்திலேயே தர்மபுரி மாவட்டம் நடுகற்களுக்கு தனி இடம் கொடுத்துள்ளது. அவற்றில் அடுத்த கட்டமாக ஒரே இடத்தில் 54 நடுகற்களை பல்வேறு பட்ட வகைகளில் இங்கு காண்பது அரிய ஒன்று ஆகும்.

## 54 நாடுகள் :

தமிழகத்தில் தர்மபுரி மாவட்டத்தில் தான் முதன் முதலாக 54 நடுகற்கள் ஒரே இடத்தில் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டள்ளது.

இந்நடுகற்களில் புலிக் குத்திப்பட்டான், சதி கற்கள், வீரர்கள் கத்தியும் கேடயம் கொண்ட அமைப்பு, வில் அம்பு ஏந்திய நிலை இப்படி பல்வேறு விதமான நடுகற்கள் உள்ளன.

அடுத்து சில கற்களில் உருவ அமைப்பு கீறல் தன்மையனவாக காட்சி அளிக்கின்றது. மேலும் அனைத்து நடுகற்களையும் ஆய்வு செய்யும் பொழுது இவற்றின் காலம் 16-17ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாக காணப்படுகின்றது.

கற்களின் அமைப்பை பார்வையிடும் பொழுது அவை நன்கு வெட்டப்பட்ட கற்பலகை போல உள்ளது. கற்பலகையில் பொறிக்கப்பட்ட நடுகற்களே இவைகள்.

**கல்வெட்டுகள்**

இங்கு காணப்படும் 54 நடுகற்களிலும் கல்வெட்டுக்கள் ஏதும் இல்லை

கற்பலகையில் பொறித்த நடுகற்கள் சீரான வடிவம் பெற்றுள்ளன.

இங்கு காணப்படும் கோயில் பெரியவர்களுக்காக எடுக்கப் பட்ட கோயில். இதனை (ராயலபைக்கி) கற்குவியல்கள் உள்ள பகுதி என குறிக்கின்றனர். மேலும் இது போன்ற மற்றொரு பகுதி இருப்பதையும் குறித்துள்ளனர்.

அல்லூர் என்ற பகுதியில் மேலும் பல நடுகற்கள் உள்ளன. அப்பகுதியையும் ஆய்வு செய்தால் நாகொண்டபாளயம் பகுதியையும் இணைத்து மொத்தம் காணப்படும் நடுகற்களை காணலாம்.

இவ்வாறு ஒரே இடத்தில் நடுகற்கள் குவிந்து கிடக்க காரணம் அறிய இயலவில்லை. மேலும் இப்பகுதியில் 16-17ஆம் நூற்றாண்டில் ஏதேனும் போர் நடந்து இருக்க வாய்ப்பு உள்ளது. அவ்வாறு நடந்து இருப்பின் அதில் உயிர் நீத்த வீரர்களின் நடுகற்களாகவும் இவை இருக்கலாம்.

# அச்சுத மங்கலம் கல்வெட்டுகள்- ஒரு நோக்கு

ச. செங்கல்வராயன்
உதவிப் பணி மேலாளர்

காயிதேமில்லத் மாவட்டம் நன்னிலம் வட்டத்தில் அச்சுத மங்கலம் எனும் சிற்றூர் உள்ளது. இவ்வூரில் உள்ள சோமனாத தேவர் கோயிலில் 31 கல்வெட்டுகள் உள்ளன. இவற்றில் 26 கல்வெட்டுகள் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையால் முழுவதுமாக அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளன. மீதமுள்ள 5 கல்வெட்டுகளுக்குக் குறிப்புரைகள் மட்டுமே வெளியிடப்பட்டுள்ளன. இக்கல்வெட்டுக்களைச் சற்று ஆய்ந்து படிக்கையில் இவ்வூரின் வரலாற்றினை அறிந்து கொள்வதற்கு இவை எந்த அளவிற்கு பயனுடையனவாய் உள்ளன என்பது தெரிய வந்தது. எனவே இக்கல்வெட்டுகளை மட்டுமே துணையாகக் கொண்டு ஒரு சிறிய வரலாற்றினை அளிப்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

இங்கு உள்ள கல்வெட்டுகள் மூன்றாம் குலோத்துங்கன் காலம் தொடங்கி விஜயநகர மன்னன் வீரபுக்கண்ண உடையார் காலம் முடிய உள்ள இடைப்பட்ட காலங்களில் வெட்டப்பட்டவை யாகும். இனி இக்கல்வெட்டுகள் வாயிலாக அறியவரும் செய்திகளைக் காண்போம்.

**வளநாடு : நாடு : ஊர்**

அச்சுதமங்கலம் எனும் இவ்வூர் "குலோத்துங்க சோழ வள நாட்டு, பனையூர் நாட்டு அச்சுதமங்கலம் சிவபாத சேகர மங்கல மான சோமனாத சருப்பேதி மங்கலம்" எனக் கல்வெட்டு களில் குறிக்கப்படுகிறது. மேற்காணும் வளநாடானது முதலாம் இராசராசன் காலத்திற்கு முன்னர் வரை "மும்முடிச் சோழ வள நாடு" என்றும், பின்னர் இராசராசன் காலத்தில் "சத்ரிய சிகாமணி வளநாடு" என்றும், முதலாம் குலோத்துங்கன் காலம் முதல் "குலோத்துங்க சோழ வள நாடு" என்றும் அழைக்கப்பட்டுள்ளது. இவ்வள நாட்டில் இங்கநாடு, பாம்பூர் நாடு, திருப்புகலூர் நாடு மற்றும் பனையூர் நாடு போன்ற நாடுகள் அடங்கியிருந்தன.

இப்பனையூர் நாட்டில் திருப்பனையூர், தென்காலக் கூத்தனூர், திருப்புகலூர், பிரம்மதேசம் போன்ற ஊர்களும்; ஸ்ரீ முடிகொண்ட சோழச் சதுர்வேதி மங்கலம், ஸ்ரீ தானதுங்கச் சதுர்வேதி மங்கலம், ஸ்ரீ சத்ரியநாதச் சதுர்வேதி மங்கலம் மற்றும் பூலோக மாணிக்கச் சதுர்வேதி மங்கலம் போன்ற பல சதுர்வேதி மங்கலங்களும் அடங்கியிருந்தன. இவ்வுண்மைகளை நன்னிலம் கல்வெட்டுகள் வாயிலாக அறியலாம்.

**ஊர் உருவானது**

தற்போது அச்சுதமங்கலம் என அழைக்கப்படும் இவ்வூர் கி.பி. 1070-ஆம் ஆண்டில் பனையூர் நாட்டின் ஒரு பகுதியாகச் சோமனாத மங்கலம் என்னும் பெயரில் புதிதாக உருவானது. இச்சோமனாத மங்கலம், பின்னர் இரண்டாகப் பிரிந்து சோமனாத மங்கலம், சோமனாததேவமங்கலம் என இருபெயர்களால் அழைக்கப்பட்டுள்ளது. மீண்டும், இச்சோமனாதமங்கலத்திலிருந்து சில பகுதிகள் தனியாகப் பிரிக்கப்பட்டுச் "சோமனாதச் சருப்பேதி மங்கலம்" என ஒரு சதுர்வேதி மங்கலம் உருவாகியுள்ளது. அடுத்து இச்சதுர்வேதி மங்கலம் சிவபாதசேகர மங்கலம் எனப் பெயர் மாற்றம் பெற்றுள்ளது. கடைசியாக இச்சிவபாதசேகர மங்கலமே தற்போதைய அச்சுத மங்கலமாக மாறியுள்ளது. மேற்கூறிய உண்மைகளை

1. (ஆண்டு) 'ஏழாவது முதல் பழம்பேர் தவிர்ந்து,' - என்றும்;
2. 'குலோத்துங்க சோழ வளநாட்டு, பனையூர் நாட்டு வேறு பிரிந்த சோமனாத மங்கலம்' - என்றும்;
3. 'சோமனாத மங்கலத்துக்கும், சோமனாத தேவ மங்கலத்துக்கும்' என்றும்;
4. 'குலோத்துங்க சோழ வளநாட்டுப் பனையூர் நாட்டு, அகரம், சோமனாத சருப்பேதி மங்கலம்' - என்றும்;
5. 'சிவபாதசேகர மங்கலமான சோமனாத சதுர்வேதி மங்கலம்' - என்றும்;
6. 'அச்சுதமங்கலமான சிவபாதசேகர மங்கலம்' - என்றும் எழுதப்பட்டுள்ள கல்வெட்டு வரிகளிலிருந்து நன்கு உணரலாம்.

### ஊர் அமைவு

இவ்வூர் முதலில் அமைந்தபோது 15 வேலிப் பரப்பினை யுடையதாக உருவாக்கப்பட்டுள்ளது. பின்னர் இவ்வூரின் எல்லைகள் அடையாளம் காணவியலாத நிலையில், மீண்டும் புதிதாக எல்லைகள் வகுக்கப்பட்டு $21\frac{1}{2}$யே 4மா$\frac{1}{2}$ முந்திரிகைக் கீழ் $\frac{1}{2}$ யே $\frac{1}{2}$மா $\frac{1}{2}$ காணி பரப்பளவுடையதாக உருவாக்கப்பட்டுள்ளது. ஊரின் நடுவில் ஸ்ரீ கோயிலும், திருமுற்றமும், திருமடைவிளாகமும், திரு நந்தவனமும், தீர்த்தக் குளமும், மடமும் அமைக்கப்பட்டுள்ளன. இச்செய்திகளை

1. 'நிலம் பதினை வேலியும் சொலாமையில் மாறி இந்நிலத்துக்கு தலைமாறு' - என்றும்;
2. 'ஆக நிலம் $21\frac{1}{2}$யே நான்மாவரை முந்திரிகைக் கீழ் அரையே அரைமா அரைக்காணியும், ஏழாவது முதல் பழம்பேர் தவிர்ந்து தேவதான இறையிலியாக சோமனாத மங்கலம் என்னும் பேரால் வேறுபிரிந்ததும்' - என்றும்;
3. 'இவ்வூரோடும் சோமனாத தேவருக்கு ஸ்ரீ கோயிலும் திருமுற்றமும், திருமடைவிளாகமும், திருநந்தவனமும்' - என்றும் வரும் இவ்வூர் கல்வெட்டுகளின் வரிகளில் இருந்து நன்கு உணரலாம்.

### அச்சுதமங்கலத் தெருக்கள்

மேற்கூறியவாறு தெளிவான அளவு அடிப்படையில் உருவான அச்சுதமங்கலத்தில் அகலமான அழகிய தெருக்கள் பல இருந்துள்ளன. காலப்போக்கில் இத்தெருக்கள் சிதைவடைந்து மேடு பள்ளங்களுடன் காட்சியளித்துள்ளன. மேலும் இத்தெருக்களில் வசித்த மக்களில் பெரும்பாலோர் வேறு பகுதிகளுக்கு குடி பெயர்ந்தமையால் இத்தெருக்களில் மக்கள் நெருக்கம் குறைந்து காணப்பட்டுள்ளது. இந்நிலையில் பழைய தெருக்களை மாற்றிப் புதிதாக வீதிகளை அமைத்துள்ளனர். அவ்வாறு அமைக்கையில் பழைய வீதிகளில் குடியிருந்தவர்களுக்கு அவரவர்க்குரிய மனைகளை அப்படியே ஒதுக்கியுள்ளனர். மீதியிருந்த மனைகளைப் புதிதாக குடியேறுபவர்களுக்கு விற்றுள்ளனர். இவ்வாறு மனை ஒதுக்கீடு பெற்றவர்கள் அம்மனைகளின் மீது முழு உரிமைக் கொண்டவர்களாகவும் விற்க, ஒற்றிவைக்க உரிமையுடையவர்களாகவும் அறிவிக்கப் பட்டுள்ளனர். மேற்கூறிய இச்செய்திகளை

1. 'மனை எடுத்திருந்த திருவீதி முன்பு நின்றபடி பேர்த்து இரண்டாம் திருவீதியாக செய்கையில்' - என்றும்;

2. 'இந்நாயனார் எழுந்தருளுகின்ற திருவீதியாட்டில்லாமை குடி நெருக்கமின்றியே இருந்தமையில்'-என்றும்;

3. 'இப்படிச் செய்யுமிடத்து தூர்க்க வேண்டுமிடம் ஸ்ரீ பண்டாரத்திலே வேண்டுவதிட்டு தூர்த்துக் குடுக்கவும்' - என்றும்;

4. 'இத்திருவீதிகளில் மனைகளில் முன்பு விலை கொண்டுடைய வியாபாரிகள் உள்ளிட்டார்க்கு தலைமாறு இடுகிற மனைகளும்' - என்றும் தொடர்ந்து வரும் கல்வெட்டு வரிகள் வாயிலாக நன்கு அறியலாம்.

## கோயில்களும் எடுப்பித்தோறும்

இவ்வூரில் சோமனாத தேவர் கோயில், விஸ்வேஸ்வர தேவர் கோயில், விஸ்வேஸ்வரமுடையார் கோயில், ஸ்வாதி கவிவேகிஸ்வரமுடையார் கோயில் மற்றும் நெடுங்களமுடையார் கோயில் என ஐந்து கோயில்கள் இருந்ததாகக் கல்வெட்டுக்கள் வாயிலாக அறிகிறோம். இவற்றில் முதல் மூன்று கோயில்களை இதே ஊரைச் சேர்ந்த ஸ்வாமிதேவர் என்பவர் எடுப்பித்துள்ளார். அடுத்து அச்சுத மங்கலத்தில் சோமனாத தேவர் கோயிலில் விஸ்வநாத தேவர் சிலையை மஹாதேவிபட்டன் என்பவர் பிரதிஷ்டை செய்துள்ளார். இச்செய்திகளை

1. ஸ்வாமிதேவர் எழுந்தருளுவித்த உடையார் சோமனாததேவர் கோயில் - என்றும்;

2. இவ்வூரில் எழுந்தருளுவித்த உடையார் விஸ்வேஸ்வரதேவர் கோயில் - என்றும்;

3. அகரம் ஸ்ரீ சோமனாத சருப்பேதி மங்கலத்து ஸ்ரீ கைலாசத்து எழுந்தருளுவித்த உடையார் விஸ்வேஸ்வரமுடையார்-என்றும்;

4. உடையார் ஸ்வாதி கவிவேகீஸ்வரமுடையார் கோயில் திருப்பணிக்கும் - என்றும்;

5. இந்நெடுங்களமுடையார் கோயிலிலே கல்வெட்டவும்-என்றும் வரும் கல்வெட்டு வரிகளின் வாயிலாக நாம் அறியமுடிகிறது.

## மடம்

இவ்வூரில் கோயில்கள் மட்டுமின்றி ஒரு மடமும் இருந்துள்ளது. இம்மடத்திற்கு இவ்வூரைச் சேர்ந்த சிலர் தம்மைத் தாமே விற்றுக் கொண்டு அடிமைகளாகியுள்ளனர். இவ்வுண்மையை

1. இத்தேவர்க்கு இவ்வூரில் ஸ்ரீகோயிலும், தீர்த்தக் குளமும், திருநந்தவனமுமாக முன்பு நீக்கின நிலம் ஐவேலியும், மடமும்- என்றும்;

2. விலை கொண்டு புகுந்த கல்தச்சரில் முளைத்தான் ஆன சண்டேசுரப் பெருந்தச்சனும், இவன் அகமுடையாள் சொன்ன வாரறிவாளும், இவள் மகன் நல்லானை பெருந்தச்சனும், இவன் தம்பி அம்பலவனும், இவன் தம்பி..... ............நங்கைப்பணை ஆண்டாளும் மடவடிமை - என்றும் வரும் கல்வெட்டு வரிகள் புலப்படுத்துகின்றன.

## கோயிலுக்குக் கொடைகள்

சாதாரணமாகத் தமிழகத்தில் கிடைக்கும் கல்வெட்டுக்கள் பெரும்பாலும் விளக்கெரிக்கக் கோயில்களுக்குத் தானமளிக்கப்பட்ட செய்திகளைத் தருவனவாகவே இருக்கும். அதிலும் பொன், காசு, பசுச்கள். சாவா மூவா பேராடுகள், நெய் எனப் பல வகைகளில் தானமளிக்கப்பட்ட செய்திகளே பெரும்பாலான கல்வெட்டுக்களில் வருவது வழக்கம். ஆனால் இவ்வூர்க் கல்வெட்டுக்களில் அத்தகைய செய்திகள் ஒன்று கூட இல்லை என்பதே ஒரு அரிய செய்தி யாகும். இவ்வூர்க் கல்வெட்டுக்களில் கோயில் திருப்பணிக்கும், வைத்தியக் காணியாகவும் நிலமளிக்கப்பட்ட செய்திகளும், தரமற்ற நிலங்களைக் கோயிலுக்கு விற்ற செய்திகளும் கிடைக்கின்றன. எடுத்துக்காட்டாக

1. உலகனான விசையாலய முத்தரையனேன் எங்கள் பிதாக்களுக்கு நன்றாக இக்கோயில்களில் திருப்பணிக்கும்... இறையிலியுமாக நான் பிரமாணம் பண்ணிக்குடுந்த நிலமாவது - என்றும்;

2. சோமனாத மங்கலத்துச் சபையார் தங்களூர் நிலம் நூற் றிருபத்தொரு.........வைத்திய விருத்திக்கு...... இறையிலி யாகப் பெற்ற நிலம் - என்றும்;

3. உற்பத்தி இலோமையில் இன்னிலம் உடையார்.........முன்பே நீர்வார்த்துக் குடுத்து இக்காசு இரண்டாயிரத்து அறுநூறு என்கைக் கொண்டு இசைவுத் தீட்டுக் குடுத்தேன் - என்றும் வரும் கல்வெட்டு வரிகளைக் கூறலாம்.

## பிற செய்திகள்

இவ்வூர்க் கல்வெட்டுகள் அச்சுத மங்கலம் எனும் இவ்வூர் அமைந்ததையும், ஊரின் பரப்பையும், அங்கு இருந்த கோயில்கள்,

தெருக்கள், மடங்கள், மருத்துவ வசதிகள் போன்ற பல செய்திகளையும் அளித்ததைப் பார்த்தோம். அவற்றைத் தவிர வேறு பல செய்திகளையும் அவை நமக்குத் தருகின்றன. அவற்றில் ஓரிரண்டைக் காண்போம்.

இக்கோயிலில் உள்ள ஒரு கல்வெட்டு "............சருப்பேதி மங்கலத்துத் தச்சரில் குலோத்துங்க சோழ பெருந்தச்சனும் குடியன் ஆன ஈசுர தேவப்பெருந்தச்சனும், ஐஞ்னூற்றுவப் பெருந்தச்சனும் தங்கள் அத்தாந்தகிக்கிற வழிக்கு குலோத்துங்க சோழப் பெருந் தச்சன் ஒரு மா அரை நிலமும், ஐஞ்னூற்றுவப் பெருந்தச்சன் ஒரு மா அரை நிலமும், இவன் தம்பி திருவகம்படிப் பெருந்தச்சன் அரை மா நிலமும், ஈசுர தேவப் பெருந்தச்சன் ஒரு மா அரை நிலமும், இவன் தம்பி வேச்ச......கம் பெருந்தச்சன் அரை மா நிலமும் ஆக நிலம் ஆறு மாவும் நிலவிழுக்காட்டோ மாதயால் வந்த மனை குடியும் இச்சோமனாத சருப்பேதி மங்கலத்து . . .
......... ....பேறுகள் பெறவும் செய்வார்களாக தச்சர்களில் இசைந்து இசைவுத்தீட்டு இட்டபடியே செய்யார் சோமனாத தேவர் கோயிலிலே கல்வெட்டப் பெற வேணுமென்று இவர்கள் நமக்குச் சொன்னமையில் இப்படி செய்யக்கடவதாக"

எனத் தொடர்கிறது. அதாவது அச்சுத மங்கலத்தைச் சேர்ந்த ஆறு பெருந்தச்சர்கள் தாங்கள் அத்தாந்தகிக்கிற வழிக்கு ஆறுமா நிலத்தினை ஒருவரிடம் கொடையாக அளித்துள்ளனர். கொடையைப் பெற்றவர் எதற்காகக் கொடையைப் பெற்றாரோ அச்செயலைச் செய்யத் தவறக் கூடும் என இவர்கள் அஞ்சியதால் இவ்வொப்பந் தத்தை அனைவரும் அறியும் வண்ணம் கோயிலிலே கல்வெட்டாக வெட்ட வேண்டுமென்று கேட்டுக் கொண்டதற்கிணங்க இக்கல் வெட்டு வெட்டப்பட்டுள்ளது. இக்கல்வெட்டில் வரும் அத்தாந்த கிக்கிற என்ற சொல்லிற்குச் சரியான பொருள் விளங்கவில்லை. இருந்த போதிலும் இக்கொடையை அளித்தவர்கள் தாங்கள் மரணம் எய்தியவுடன் தங்களது உடலைப் புதைத்து புதைத்த இடத்தில் நினைவுச் சின்னத்தை எழுப்பி அதைப் பாதுகாக்க, பராமரிக்கத் தேவையான செலவுகளுக்காக இக்கொடையை அளித் திருக்கக்கூடும் எனக் கருதலாம். இக்கருத்தினைக் குறிக்கவே அத்தாந்தகிக்கிற வழிக்கு என்ற சொல்லை அவர்கள் பயன் படுத்தியிருக்கக்கூடும்.

அடுத்துச் சோமனாத தேவமங்கலத்துக்கும், சோமனாத தேவச் சதுர்வேதி மங்கலத்துக்கும் இடையில் முடிகொண்ட சோழப்

பேராறு என்னும் ஆறு இருந்துள்ளது. இவ்வாற்றில் நீர் நிறைந்து ஓடிய போது இரு பகுதி மக்களுக்கும் இந்நீரினை அணைபோட்டுத் தடுப்பது தொடர்பாகத் தகராறு ஏற்பட்டுள்ளது. அப்போது ஒருவனைத் தண்டிப்பதற்குப் பதிலாக வேறொருவனைத் தவறுதலாகத் தண்டித்து விடுகிறார்கள். இத்தவறுக்குப் பரிகாரமாக இறந்தவனது மகனுக்கு உதிரப்பட்டியாக நிலம் அளிக்கப் பட்டுள்ளது. ஆனால் இந்நிலத்தில் சரியான விளைச்சல் இன்மையால் நிலத்தினைப் பெற்றவன் சுவாமி தேவர் என்பவரது யோசனையின் பேரில், அந்நிலத்தினைக் கோயிலுக்குத் திருநாமத்துக் காணியாக 2600 காசிற்கு விற்ற செய்தியை ஒரு கல்வெட்டுத் தெரிவிக்கிறது. இச்செய்தியைத் தரும் கல்வெட்டு வரிகளாவன:

1. சோமனாத தேவ மங்கலத்துக்கும், சோமனாத தேவசருப்பேதி மங்கலத்துக்கும் [நாடாய]
2. முடிகொண்ட சோழப் பேராறு நீர் பெருக்குகிற இடத்து
3. சீதக்க மங்கல[த்தார்]கதிரர் உடன் அணைப்பிணக்காக பிணங்குகிற இடத்து
4. சீதக்க மங்கலத்து அனுஸானத்து ஒருத்தனுக்கு தலைமாறு
5. என் தவப்பன் உடையானான இராஜராஜப் பேரையனைத் தெண்டிக்கையில்
6. இவன் குடும்பமான எனக்கு உதிரப்பட்டியாக . . . . . . .
7. .........உற்பத்தி இலோமையில் இன்னிலம்
8. உடையார் சுவாமி தேவர் திருவுள்ள......
9. இந்நாயனார் திருநாமத்துக் காணியாக
10. ......திருமுன்பே நீர்வார்த்து
11. இறையிலியாகக் குடுத்து
12. பண்டாரத்து நான் வாங்கின காசு இரண்டாயிரத்து அறுநூறு.

அடுத்து இவ்வூரில் இரண்டு பாடல் கல்வெட்டுகள் காணப் படுகின்றன. முதற் பாடல் வெண்பாவிலும் அடுத்தது கலித் துறையிலும் அமைந்துள்ளன. இப்பாடல்களில் மஹாதேவிப் பட்டன் என்பவன் திருவாஞ்சியத்திலும் அச்சுத மங்கலத்திலும் விஸ்வநாத தேவரைப் பிரதிஷ்டை செய்துள்ள செய்தி காணப்படுகிறது.

## கல்வெட்டுக்களில் குறிக்கப் பெறுவோர்

இவ்வூர்க் கல்வெட்டுக்களில் ஏராளமான பெயர்கள் குறிக்கப் படுகின்றன. அவற்றில் ஸ்ரீ கண்ட சம்பு என்றழைக்கப்பட்ட ஸ்வாமி தேவர், அவரது மைந்தர்கள் இராஜசூரிய பிரம்மமாராயர், திவாகர பிம்மமாராயர், போன்றவர்களும்; விசையாலய முத்தரையன், குலோத்துங்க முத்தரையன், திருபுவன வீரமுத்தரையன் போன்ற முத்தரைய குலத்தினரும்; அம்பட்டன் தவச்சக்கரவர்த்தி, அம்பட்டன் கவிச் சக்கரவர்த்தி போன்றோரும்; வேசாலியரையன், செழிய தரையன், பிரதிகங்கரையன் போன்ற அரையர்களும்; வயிராதி ராஜன், காங்கேயராஜன், இராஜாதிராஜன், காலிங்கராசன், ஜயதுங்க பிரம்மாதிராஜன் போன்றோர்களும்; சோமனாதபட்டன், சீகண்ட தேவப்பட்டன், விஸ்வேஸ்வரபட்டன் போன்றோரும் முக்கியப் பங்கு வகிக்கின்றனர்.

## முடிவுரை

அச்சுதமங்கலத்தில் பதினான்கு முழுக் கல்வெட்டுகளும் பன்னிரெண்டு துண்டுக் கல்வெட்டுக்களும் ஐந்து கல்வெட்டு களுக்கான குறிப்புக்களும் மட்டுமே கிடைக்கின்றன. இக்கல்வெட்டுக், களை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு அவ்வூரின் தோற்றம் அடைந்த பெயர் மாற்றங்கள், ஊரின் அமைப்பு, கோயில்கள், அவற்றை எடுப்பித்தோர் போன்ற பல செய்திகளை நம்மால் அறிய முடிகிறது. இதிலிருந்து நம் வரலாற்றுக்குக் கல்வெட்டுக்கள் எந்த அளவிற்கு முதன்மை ஆதாரமாக அமைந்து பெருந்துணை புரி கின்றன என்பது நன்கு விளங்கும்.

——

# நாகொண்ட பாளையம்


**தி சுப்பிரமணியன்**
காப்பாட்சியர், தர்மபுரி


நாகொண்ட பாளையம் என்ற ஊர் ஒசூர் வட்டத்தில் தளிக்கு அருகில் உள்ளது. இந்த ஊருக்கு ஒசூரிலிருந்தும் தளியி லிருந்தும் பேருந்துகள் உள்ளன. இந்த ஊரின் அருகில் பெரிய குளம் ஒன்று உள்ளது. அந்த குளத்தின் கிழக்குப் பகுதியில் ஒரு கோயில் கட்டப்பட்டுள்ளது. இக்கோயிலின் பெயர் "தொட்ட ஆயாகுடி" என்று கூறுகின்றனர்.

சுமார் 50 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட இந்த கோயில் கிழக்கு நோக்கிக் காணப்படுகின்றது. தொட்ட ஆயா குடி என்றால் பெரியவர்களின் கோயில் என்று கூறுகின்றனர். இந்த கோயிலைச் சுற்றி 54 நடுகற்கள் வரிசையாக நடப்பட்டுள்ளன. ஒரே இடத்தில் இவ்வளவு அதிகமாக நடுகற்கள் இருப்பது இங்கு மட்டும்தான். இவ்வளவு நடுகற்கள் எவ்வாறு வந்தன என்பது புதிராக இருந்தாலும் இது ஒரு வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த இடமாக இருந்துள்ளது என்பதை மறுக்க முடியாது.

இந்த நடுகற்களில் புலிகுத்தி பட்டான் நடுகல், பன்றி குத்தி பட்டான் நடுகல், சதிக்கல் போன்ற மூன்று வகையானவை உள்ளன. ஐந்து நடுகற்கள் புலிகுத்திப் பட்டான் நடுகல் வகையிலானவை. இவற்றில் புலிகள் இரண்டு கால்களில் நின்று இரண்டு கால்களை மேலே தூக்கியவாறு காணப்படுகின்றன. வீரன் அதன் வயிற்றில் குத்துகின்ற நிலையில் செதுக்கப் பட்டுள்ளான். இந்த கற்கள் பெரும்பாலும் அதிக வேலைப் பாடுகளுடன் கூடியதாகத் தெரியவில்லை. உருவங்களில் காணப் படும் பாகங்கள் தெளிவாகக் காணப்படவில்லை. கற்கள் அதிக அளவில் பொறிந்த நிலையில் உள்ளன.

சில நடுகற்கள் புடைப்புச் சிற்பங்களாகக் காட்டப்பட்டுள்ளன. சில உருவங்களைக் கீரி காட்டப்பட்டுள்ளன. கற்களில் கோடு போன்றஅமைப்பில் கீரி இந்த நடுகற்களைச் செய்துள்ளனர். இந்த உருவங்களில் வெளித் தோற்றம் மட்டும் காணப்படுகின்றன.

இயற்கையாகக் கிடைத்த கற்களைக் கொண்டு பல நடுகற்கள் செய்துள்ளனர். சில பலகைக் கற்களாகக் காணப்படுகின்றன. இந்தக் கற்கள் எல்லாம் கோயிலின் கிழக்கு, வடக்கு, தெற்கு ஆகிய பகுதிகளில் வரிசையாக நடப்பட்டுள்ளன. சில நடுகற்களில் வீரனுடன் பெண்கள் நின்ற நிலையில் உள்ளனர். இவர்களின் கைகளில் நீண்ட தோற்பை அமைப்பில் ஒரு பொருள் காணப் படுகின்றது. இத்தகைய அமைப்புடைய நடுகற்கள் தருமபுரி பகுதியில் அதிக அளவில் கிடைத்துள்ளன.

இந்த நடுகற்களை இங்குள்ள குரும்பர் என்ற பிரிவைச் சார்ந்த மக்கள் மட்டும் வழிபடுகின்றனர். மற்றப் பிரிவினர் இதை வழிபடவில்லை. இக்கோயிலுக்குப் பலவகையான பூசைகள் விழாக்கள் ஆண்டுதோறும் இம்மக்களால் செய்யப் படுகின்றன. தேர்த் திருவிழாக்களும் நடை பெறுகின்றன.

இந்நடுகற்கள் எல்லாம் சுமார் கி.பி. 16, 17-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாக இருக்க வாய்ப்புகள் உள்ளன. ஆனால் கல்வெட்டுகள் எதுவும் இல்லை. எனினும் இவை இப்பகுதியில் வாழ்ந்த பாளையங் களுக்கு இடையே ஏற்பட்ட சண்டையின் பொருட்டு ஏற்பட்ட நடுகற்களாக இருக்க வாய்ப்புகள் உள்ளன. எனினும் தமிழகத்தில் ஒரே இடத்தில் இவ்வளவு நடுகற்கள் இருப்பது வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த ஒன்றாகக் கருத இடமளிக்கிறது.

——

# கரூர் வட்டத்தில் களஆய்வு

இர. ஜெயராமன்
இளநிலைக் கல்வெட்டாய்வாளர்
தொல்பொருள் ஆய்வுத்துறை, தஞ்சாவூர்

## தெண்ணிலை

திருச்சி மாவட்டம் கருவூரிலிருந்து கோவை செல்லும் நெடுஞ் சாலையில் 27 கி.மீ. தொலைவில் தெண்ணிலை என்னும் ஊர் அமைந்துள்ளது. இவ்வூரில் பேருந்து நிறுத்தத்திற்கு அருகிலேயே "லிங்கேசுவரன் கோயில்" எனப்படும் சிவன்கோயில் ஒன்று உள்ளது. பழமை வாய்ந்த இக்கோயில் மிகவும் சேதமடைந்ததால் தற்காலத்தில் புதுப்பிக்கப்பட்டு, திருப்பணி செய்து கும்பாபிஷேகமும் நடை பெற்றுள்ளது. இதற்குச் சான்றாக இங்குள்ள பழைய கல்வெட்டுக் கள் எல்லாம் இடம் மாறியும், தலை கீழாகவும் ஆங்காங்கு வைத்துக் கட்டப்பட்டுள்ளன. மேலும் முன் மண்டபத்தின் அதிட்டானப் பகுதியில் "7-7-1935 ஷூ கும்பாபிஷேகம் நடந்தது" என்று கல்வெட்டும் பொறிக்கப்பட்டுள்ளது. இக்கோயில் கருவறை, முன் மண்டபம், அம்மன் கோயில், சண்டி, நந்தி மண்டபம், கோபுரம் என்ற பகுதிகளைக் கொண்டுள்ளது.

கோபுர நுழைவாயிலின் இடப்புறம் மேலே பாவுக்கல்லில் ஒரு துண்டுக் கல்வெட்டு காணப்படுகிறது. கல்வெட்டின் முழுப் பகுதியும் இங்கு இல்லாமல் இதனுடைய தொடர்ச்சி நுழைவாயிலின் உள்ளேயும், கோபுர மண்டபத்திலும் இரண்டு துண்டுக் கல்வெட்டு களாக உள்ளன. ஸ்வஸ்திஸ்ரீ சிவல்லவ தேவற்கு யாண்டு மூன்றாவது என்று தொடங்கும் இக்கல்வெட்டில் இவ்வூரின் பெயர் "தெண்ணிலி" என்றும், இறைவனின் பெயர் "தெண்ணிலி நாயனார் தேவேந்தீசுரமுடைய நாயனார்" என்றும் குறிப்பிடப்படுகிறது. கோயிலுக்குத் தானம் அளித்த செய்தி கூறப்பட்டுள்ளது.

இது தவிரக் கோபுரத்தின் நிலைத்தூணில் (வலப் பக்கம்) சோழர் கல் வெட்டின் தொடக்கம் மட்டுமே உள்ள கல்வெட்டு காணப்படுகிறது. செய்தி கிடைக்கவில்லை.

கருவறையின் கீழ்ப்புறம் அம்மன் கோயில் இடம் பெற்றுள்ளது. அதனையடுத்துச் சிறு நவகிரக மண்டபம் ஒன்று அமைந்துள்ளது. இம்மண்டபத்தின் தென்மேற்கு மூலையில் உள்ள தூண் ஒன்றில் முதலாம் இராசேந்திர சோழனின் கல்வெட்டு ஒன்று தலைகீழாக வைத்துக் கட்டப்பட்டுள்ளது. இராசேந்திரனின் எட்டாவது ஆட்சி யாண்டில் வெட்டப்பட்ட இக்கல்வெட்டில் இவ்வூர் வடகரை மணலூர் நாட்டுத் தெண்ணிலி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. கோயிலுக்குப் (சோபானம்) படிகள் அமைத்துக் கொடுத்தது பற்றி இக்கல்வெட்டுக் குறிப்பிடுகிறது.

ஸ்வஸ்திஸ்ரீ
ராஜேந்திர தே
வற்குயாண்டு
எட்டாவது
வடகரை மணலூ
ர் நாட்டுத் தெ
ண்ணிலிக் குர
வரில் விச்சஞ்சென்நம்
பி தம்மம் இச் சோ
பாநம்'

**சங்கர மலை**

கருவூரிலிருந்து திருச்சி செல்லும் நெடுஞ்சாலையில் 20 கி. மீ. தொலைவில் உள்ள மணவாசியில் இறங்கி 2 கி·மீ. தெற்கே நடந்து சென்றால் பெரிய மலை ஒன்றை அடையலாம். இவ்வூர் அன்று முதல் இன்று வரை சங்கரமலை என்றே வழங்கப்படுகிறது. மலையின் உச்சியில் சிறிய சிவன்கோயில் ஒன்று காணப்படுகிறது. மலையின் அடிவாரத்தில சிறிய அய்யனார் கோயில் உள்ளது. மலையின் மேலே தென்புறத்தில் பாறையின் மேல்பகுதியில் ''ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்தி கோனேரின்மை கொண்டான்'' எனத் தொடங்கும் கல்வெட்டு நன்றாக உள்ளது. அதே தொடக்க முள்ள மற்றொரு கல்வெட்டு கீழே உள்ளது. அக்கல்வெட்டு சிதைந்து காணப்படுகிறது.

கல்வெட்டில் இவ்வூரின் பெயர் சங்கரமலை என்ற அழைக்கப் படுகிறது. இது தட்டையூர் நாட்டைச் சார்ந்த பகுதி என்றும் கூறுகிறது. இறைவனின் பெயர் சங்கரமலை உடையார் என்று

கூறப்பட்டுள்ளது. கல்வெட்டு இறைவனுக்குக் கோயில் திருப்பணிக்கும், நிமந்தத்துக்கும் நிலம் வழங்கப்பட்ட செய்தியும், வசூலிக்கப்பட்ட வரிகள் பற்றியும், கூறுகிறது.

இக்கல்வெட்டையடுத்துக் கீழே 'திரிபுவனச் சக்கரவர்த்தி கோனேரின்மை கொண்டான்'' என்று தொடங்கும் மற்றொரு கல்வெட்டும் காணப்படுகிறது இக்கல்வெட்டு உள்ள பகுதியின் நடுவில் நீளமாகக் கல் சிதைந்துவிட்டதால் கல்வெட்டை முழுமையாகப் படிக்க இயலவில்லை. 15 வரிகளையுடைய இக்கல்வெட்டு மேலேயுள்ள கல்வெட்டின் செய்தியையே கூறுவதாக உள்ளது. மேலும் இச்சங்கரமலையின் அருகே வடக்குத் திசையில் ஒரு சிறிய குன்று காணப்படுகிறது. குன்றின் கீழே சரிவான பகுதிக்குக் கீழே சமண முனிவர்கள் தங்கியிருந்த கற்படுக்கை ஒன்று வழவழப்பாக உள்ளது. குன்றின் மேல் ஒரு சில பழைய தமிழ் எழுத்துகள் காணப்படுகின்றன. ஆனால் முழுமையாகப் படிக்க இயலவில்லை.

### தம்மநாயக்கன்பட்டி

கருவூரிலிருந்து திண்டுக்கல் செல்லும் சாலையில் 15 கி. மீ. தொலைவில் தம்மநாயக்கன்பட்டி என்னும் சிற்றூர் அமைந்துள்ளது. இவ்வூரில் வரலாற்றுச் சிறப்பு மிக்க கோயில்கள் ஏதும் இல்லை. சிறு தெய்வங்களாகிய பிள்ளையார், அய்யனார் கோயில்கள் மட்டுமே உள்ளன. இவ்வூரின் நடுவில் சோழர்காலக் கட்டட அமைப்புடன் கூடிய கற்கிணறு ஒன்று தண்ணீர் இல்லாமல் பாதுகாப்பின்றிக் காணப்படுகிறது. இவ்வூரின் கிழக்கே நீண்ட கற்பாறையில் பிற்காலத் தமிழில் எழுதப்பட்ட கல்வெட்டுக் காணப்படுகிறது. மேலும் ஊரின் மேற்குத் திசையில் புன்செய்க் காட்டில் மூன்றடி உயரமுள்ள எழுத்துப் பொறிக்கப்பட்ட கல் ஒன்று நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. எழுத்துகள் பாசி படிந்து காணப்படுவதால் நேரில் படிக்க இயவில்லை. இதற்குச் சற்று அருகில் ஒரு சிறிய பாறையில் கல்வெட்டு ஒன்று காணப்படுகின்றது. இம்மூன்று கல்வெட்டுகளும் எழுத்து அமைதியை நோக்க (பிற்கால) ஒரே காலத்தில் நிலத்துக்கு எல்லை குறிக்கப்படுவதற்கு அடையாளமாக வெட்டப்பட்டிருக்கலாம் எனத் தோன்றுகிறது.

### பழைய ஜெயங்கொண்டம்

கருவூரிலிருந்து திருச்சி செல்லும் வழியில் 35 கி.மீ. தொலைவில் பழைய ஜெயங்கொண்டம் என்னும் சிற்றூர் அமைந்துள்ளது.

இவ்வூருக்குக் கருவூரிலிருந்து உப்பிடமங்கலம் வழியாகவும், குளித்தலையிலிருந்து மேட்டுமகாதானபுரம் வழியாகவும் பேருந்துகள் செல்கின்றன. பழைய ஜெயங்கொண்ட சோழபுரம் என்னும் வரலாற்றுப் பெயர் நாளடைவில் மருவி "பழைய சங்கடம்" எனக் மக்களால் அழைக்கப்படுகிறது.

கி.பி. 9-ஆம் நூற்றாண்டு முதல் வரலாற்றுச் சிறப்புடன் விளங்கிய இவ்வூர் இன்று காணப்படுகிறது. ஆயினும் பண்டைய வரலாற்றுச் சின்னங்கள் அழிந்துபட்ட நிலையில் ஆங்காங்கே காணப்படுகின்றன. இவ்வூரில் ஆளவந்த ஈஸ்வரன் கோயில், ஆளவல்லித் தாயார் கோயில், மலையாளசாமி கோயில் மற்றும் அம்மன் கோயில்கள் உள்ளன. இவற்றில் ஆளவந்த ஈஸ்வரன் கோயில் சோழர்காலக் கோயிலாகும். ஆனால் பிற்காலத்தில் அழிந்துபட்டதால் பழைய கருங்கற்களையே வைத்து திருப்பணி செய்துள்ளனர். கோயிலைச் சுற்றி அழகிய கருங்கல்லாலான மதிற்சுவர் காணப்படுகிறது. கோயிலில் பழைய கல்வெட்டுகள் ஏதுமில்லை. பிற்காலக் கல்வெட்டொன்று தெற்குப் பக்கம் அதிட்டானப் பகுதியில் உள்ளது. இங்குச் சோழர் காலத்தைச் சேர்ந்த முருகன், பைரவர் சிலைகள் சிதைவடைந்து கோயிலின் உள்ளேயும், விநாயகர் சிலை வெளியில் பேருந்து நிற்குமிடத்திலும் வழிபாட்டற்றுக் கிடக்கின்றன.

திருச்சி மாவட்டம் கங்கைகொண்ட சோழபுரத்திற்கு அருகே ஜெயங்கொண்ட சோழபுரம் என்னும் நகரம் இன்றும் உள்ளது. சோழ மன்னனின் வெற்றியின் நினைவாக அமைக்கப்பட்டதே கங்கைகொண்ட சோழபுரமாகும். அது போலவே இப்பழைய ஜெயங்கொண்டமும், அதற்கு முன்பே சோழர் காலத்தில் வெற்றியின் சின்னமாக நிர்மாணிக்கப்பட்ட ஊராகலாம். எனவே தான் பழைய ஜெயங்கொண்டம் எனப் பெயர் பெற்றதெனலாம். சிவன் கோயிலின் முன்பு பெரிய துவஜஸ்தம்பம் ஒன்று உள்ளது.

இவ்வூர் பேருந்து நிறுத்தத்தில் இருந்து அரைகல் தூரம் நடந்து சென்றால் அழகிய பெரிய தெப்பக்குளம் ஒன்று காணப்படுகிறது. குளத்தைச் சுற்றி நான்கு பக்கமும் கருங்கல்லால் எழுப்பப்பட்ட மதிற்சுவரும், நான்கு பக்கமும் இறங்கி குளத்திற்குள் செல்ல நான்கு புறமும் படிக்கட்டுகளும் உள்ளன. அவற்றுள் வடபுறமுள்ள வழியினைச் சிறிய சிற்பங்கள் அணி செய்கின்றன. மதிலின் நான்கு புறமும் 28 நந்திகள் அமர்ந்த நிலையில் அழகுடன்

விளங்குகின்றன. இவற்றுள் நான்கு நந்திகள் மட்டுமே முழுமையாக உள்ளன. மற்ற நந்திகள் எல்லாம் உடைந்து காணப்படுகின்றன. சோழர்காலக் கலைப்பாணியில் அமைந்த இக்குளம் கி.பி. ௯, 10-ஆம் நூற்றாண்டில் சோழ மன்னர்கள் இவ்வூரை நிர்மாணித்தபோது அமைக்கப்பட்டிருக்கலாம். இத்தெப்பக்குளத்துக்கு அருகில் நத்த மேடு என்ற இடம் உள்ளது. இங்கு பண்டைய நகரம் இருந்து அழிந்தமைக்கான சான்றாகப் பானை ஓடுகளும், செங்கற்களும் இன்றும் சிதறிக்கிடக்கின்றன.

இந்த நத்தமேட்டிற்குத் தெற்கே திரு. சுப்பிரமணியன் செட்டியார் அவர்களுடைய புன்செய்ச் காட்டில் சோழர் காலத்தைச் சேர்ந்த கல்செக்கு (உரல்) ஒன்று கவனிப்பாரற்றுக் கிடக்கிறது. இந்த செக்கு சுமார் நான்கு அடி உயரமும் 2·5 அடி அகலமும் உடையதாகும். இதன் மேற்பகுதியிலுள்ள வட்டத்தில் சோழர் கால எழுத்தமைதியில் கல்வெட்டு மிகவும் அழகாக, வட்டமாகப் பொறிக்கப்பட்டுள்ளது. எழுத்தமைதியை நோக்க இச்செக்கின் காலம் கி.பி. 9-10 ஆம் நூற்றாண்டாகும்.

**கல்வெட்டு**

1. "ஸ்ரீ வடுகம்பட்டன் தன்னுடை செக்கு வீசம்பட்டனுக்கு நகர மறிய . . . . . . குடுக்க இந்ந
2. ரமறிய பிடாரியிக்கு திருவிளக்கினுக்கு நீரோடட்டிக் குடுத்த [ா]ன் வீசம்பட்டன்
3. இச்செக்கு"

கி.பி. 9-10 நூற்றாண்டில் இவ்வூரில் சிறப்புடன் வழிபாட்டில் இருந்த பிடாரி கோயிலில் நாள்தோறும் திருவிளக்கு எரிப்பதற்காக, ஸ்ரீ வடுகம் பட்டன் என்பவன் தன்னுடைய செக்கினை வீசம் பட்டனுக்கு நகரத்தார் அறியக் கொடுத்தான் என்பதை இக்கல்வெட்டுக் கூறுகிறது.

---

# பேரூரில் அரிய சிற்பங்கள்

**இரா. ப. கருணானந்தன்,** எம்.ஏ., டி.இ.ஏ.
தொல்பொருள் ஆய்வுத்துறை, கோவை

கோவைக்கு அருகில் உள்ள பேரூர் வரலாற்றுச் சிறப்பு மிக்க ஊர்களுள் ஒன்று. மேலைச் சிதம்பரம் என்று அழைக்கும் பேறு பெற்றது. உலகப் புகழ் பெற்ற அரிய சிற்பங்கள் பல பேரூரில் உள்ளன. அண்மையில் பேரூரில் முற்காலப்பாண்டியர் காலத்தைச் சேர்ந்த தாயர்எழுவர் (சப்தமாதர்) சிற்பத்தொகுதி இருப்பது புதிதாக அறியப் பெற்றுள்ளது.

சங்க இலக்கியம் காஞ்சியம் பெருந்துறை எனப்பாராட்டும் நொய்யல் ஆற்றங்கரையில் பேரூர் உள்ளது. சங்க கால மக்கள் இறந்தவர்களை அடக்கம் செய்வதற்காகப் பயன்படுத்திய புதை குழிகளை வரலாற்று அறிஞர் பெருங்கற்காலச் சின்னங்கள் என்பர். சங்க இலக்கியங்கள் இவற்றைக் கல்பதுக்கை, கல்லரண் என்று கூறும். இத்தகு பெருங் கற்காலக் கல்பதுக்கைகள் பேரூரில் இருப்பது அறியப்பெற்றுள்ளதால், பேரூர் சங்ககாலம் தொடங்கி நிலை பெற்ற ஊர் எனலாம்.

அப்பர், சுந்தரர் பாடல்களில் பேரூர் பற்றிய குறிப்புக்கள் உள்ளன. சேக்கிழார் பெரியபுராணத்தில் பேரூர் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். பேரூரில் திருஆள்பட்டி உடையார், இடங்கை நாயக ஈச்சுரமுடையார், அம்பலவாணர் ஆகியோர் கோயில்கள் உள்ளன. கோக்கண்டன் ரவி, ரவிகண்டன் என்னும் சேரமன்னர் தொடங்கிக் கொங்குச் சோழர், கொங்குப்பாண்டியர், போசளர் போன்ற அரச வம்சத்தினர் கொங்கு நாட்டை ஆட்சி செய்தனர் இம்மன்னர்களின் கல்வெட்டுகள் பேரூரில் உள்ளன.

சீவரமங்கலம் செப்பேடு, சடிலவர்மன் பராந்தக நெடுஞ் சடையன் கொங்குப் பகுதியை வென்று பேரூரில் திருமாலுக்குக் குன்று போன்ற ஒரு கோயிலைக் கட்டினான் என்று கூறுகிறது. போசள அரசன் மூன்றாம் வீரவல்லாளன் (1292-1341) கல்வெட்டு ஒன்றும் இத்திருமால் கோயில் பற்றிப் பேசுகிறது. இன்று இத்திருமால் கோயில் பேரூரில் இல்லை. பட்டிப்பெருமாள் கோயில் முன்பாக

உள்ள தெப்பக்குளம் பகுதியில் திருமால்கோயில் இருந்ததாகச் சொல்லப் பெறுகிறது. இக்கோயிலைச் சேர்ந்த சிற்பம் ஒன்று பட்டிப் பெருமாள் கோயில் தெற்குத் திருச்சுற்றில் சிதைந்த நிலையில் உள்ளது. அறிஞர் பலரும் இச்சிற்பம் பேரூர் திருமால் கோயிலைச் சேர்ந்த சிற்பம் என்பதை ஏற்றுக்கொண்டுள்ளனர். இச்சிற்பம் இலக்குமிநாராயணன் சிற்பம். அரிய கலைப் படைப்பு. திருமால் அன்னை இலக்குமியை இடது மடியில் அமர்த்திய நிலையில் அமைந்த சிற்பம். பேரூரில் திருமால் கோயிலை அமைத்த பாண்டியன் காலத்தைச் சேர்ந்த சிற்பம் என்று உறுதியாகக் கொள்ளலாம்.

பேரூரில் சாம்பல்மேடு ஒன்று உள்ளது. சாம்பல்மேடு பற்றிப் பேரூர்ப் புராணமும் பாடியுள்ளது. பேரூர் சாம்பல்மேட்டில் 1800 ஆண்டுப் பழமை உடைய பானை ஓடுகள் வெளிப்படுகின்றன. இச்சாம்பல் மேட்டுக்குச் செல்லும் வழியில் குடலூர் மாரியம்மன் கோயில் உள்ளது. இக்கோயிலின் அருகே ஒரு புளிய மரத்தடியில் உலகப் புகழ் பெற்ற அரிய சிற்பம் ஒன்று உள்ளது. இச்சிற்பம் லகுலீசர் சிற்பம். தமிழகத்தில் லகுலீசர் சிற்பம் பேரூர் தவிர்த்து அரிட்டாபட்டி (மதுரை), மாமல்லை தர்மராச ரதம், புதுக் கோட்டை தேவர்மலை போன்ற சில இடங்களில் மட்டுமே உள்ளன.

லகுலீசர் சிற்பம் பெரும்பாலும் ஆடையற்ற நிலையில், கையில் லகுலம் என்னும் தண்டுடன் காணப்பெறுவது வழக்கு. பேரூர் லகுலீசர் சிற்பம் மணற்கல்லால் செய்யப்பெற்றது. லகு லீசர் அர்த்தபரியங்க ஆசனத்தில் அமர்ந்துள்ளார். இரு கைகள், வலக்கையில் கபாலம், இடக்கையில் லகுலம் தோளில் சார்த்திய நிலை, ஜடாபாரம், துணியிலான பூணூல் அணிந்துள்ளார். பேரூர் லகுலீசர் சிற்பத்தை ஆய்வு செய்த சிற்பவல்லுநர் இச்சிற்பம் மேலைக் கங்கர் கலைப்பாணியில் அமைந்தது என்றும் கி.பி. 7-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்றும் கருத்துத் தெரிவித்துள்ளனர். மேலைக் கங்கர் கொங்கு நாட்டுப் பேரூரிலிருந்து சென்றவர்கள் என்ற ஒரு கருத்தும் உள்ளது. பேரூரில் உள்ள லகுலீசர் சிற்பத்தைக் கொண்டு கி.பி. 7-ஆம் நூற்றாண்டு வாக்கில் பேரூரில் லகுலீச பாசுபதம் என்னும் மதத்தைப் பின்பற்றியவர்கள் இருந்தனர் என்றும் அவர்கள் அமைத்தது இவ்வரிய சிற்பம் என்றும் கொள்ளலாம்.

பேரூர் சாம்பல்மேட்டுக்கு மேற்கில் உள்ள தாயர்எழுவர் (சப்த மாதர்) சிற்பத் தொகுதியை மக்கள் ஏழு பிடாரி கோயில் என்று அழைக்கின்றனர்.

தாயர்எழுவர் முத்திரை அரப்பா அகழ்வாய்வில் கிடைத் துள்ளது. ரிக் வேதத்தில் தாயர்எழுவர் வழிபாடு பற்றிய குறிப்பு உள்ளது. எனவே தாயர்எழுவர் வழிபாட்டின் தொன்மையை அறியலாம். தாயர்எழுவர் சிற்பங்கள் இந்தியா முழுமையும் கிடைத்துள்ளன. எல்லோரா குகைக் கோயிலில் தாயர்எழுவர் சிற்பம் உள்ளது. சாளுக்கியர் காலத்தில் (கி.பி 6) தாயர்எழுவர் வழிபாடு சிறப்பிடம் பெற்றது. சாளுக்கியர் தங்களைத் தாயர்எழுவரால் வளர்க்கப் பெற்றவர் என்று கூறிக்கொள்வதில் மகிழ்ச்சியடைந் துள்ளனர். சாளுக்கியர் செப்பேடுகளில் தாயர்எழுவருக்கு வணக்கம் கூறப்பெற்றிருக்கும். தமிழகத்தில் தாயர்எழுவர் வழிபாடு பல்லவர், பாண்டியர், சோழர், பிற்காலப் பாண்டியர், விசயநகரர் போன்ற அரசர் காலத்திலும் இருந்ததற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. சிலப்பதிகாரம், கலிங்கத்துப்பரணி, தக்கயாகப்பரணி, திருமந்திரம், திருவிளையாடற்புராணம் போன்ற நூல்களில் தாயர்எழுவரைப் பற்றிய குறிப்புகள் உள்ளன.

சிவன் கோயிலில் கருவறைக்குத் தென்திசையில் எழுவர்தாயரை எழுந்தருளச் செய்தல் மரபு. இவர்களுக்குத் தனிக்கோயில் அமைக்கும் மரபும் இருந்துள்ளது. வேளச்சேரி (சென்னை), ஆலம் பாக்கம் (திருச்சி) முதலிய ஊர்களில் தாயர்எழுவர்க்கான தனிக் கோயில்கள் உள்ளன. பேரூரில் காணப்படுவதும் தாயர்எழுவர்க்கான தனிக்கோயிலே. விசயாலய சோழன் வெற்றியின் நினைவாகத் தஞ்சை யில் நிசும்பசூதனிக்குக் கோயில் அமைத்தான் என்பது வரலாறு. இதைப்போன்று கொங்கு நாட்டை வென்ற முற்காலப் பாண்டியன் சடில பராந்தக நெடுஞ்சடையன் (கி.பி. 765-790) வெற்றியின் நினை வாக இந்த தாயர்எழுவர் கோயிலை அமைத்தான் எனலாம். பேரூர் தாயர்எழுவர் சிற்பத் தொகுதி முற்றிலும் முற்காலப் பாண்டியர் கலைப்பண்பில் அமைந்துள்ளது. திருப்பரங்குன்றம் குடைவரைக் கோயிலில் உள்ள முற்காலப் பாண்டியர் சிற்பங்களின் தாக்கத்தை இச்சிற்பங்களில் காணமுடிகிறது.

எழுவர் உருவங்களோடு யோகேசுவரராகவோ அல்லது வீரபத்திரராகவோ சிவன் உருவம் மற்றும் விநாயகர் உருவமும் அமைத்தல் மரபு. தாய்மார் எழுவரும் வரிசையாக அமர்ந்திருக்க்

வலப்பக்க இறுதியில் வீரபத்திரரும் இடப்பக்க இறுதியில் விநாயகரும் காணப்படுவர். இவர்கள் தாயர்எழுவருக்குப் பாது காவலர். பேரூரில் அறியப்பெற்றுள்ள எழுவர் சிற்பத் தொகுதி தற்போது ஒரே வரிசையில் இல்லை. காட்டுக்கு நடுவில் மரத் தடியில் இரு வரிசையில் அமைக்கப் பெற்றுள்ளது. பின்னாளில் இம்மாற்றம் நிகழ்ந்திருக்க வேண்டும். தாயர்எழுவர் சிற்பங்கள் ஒரே கல்லில் அமையாமல் ஒவ்வொரு சிற்பமும் தனித்தனிக்கல்லில் அமைக்கப்பெற்றுள்ளது. எழுவர் சிற்பத்தின் வலப்புறம் சிவன் யோகேசுவரராக அமர்ந்துள்ளார். இடப்புறமாக மரபுக்கு முற்றிலும் மாறுபட்டு நாகராசர் சிற்பம் காணப்படுகிறது. தாயர்எழுவர் சிற்பத்தொகுதியில் நாகராசர் சிற்பம் கண்டுபிடிக்கப் பெறுவது இதுவே முதல்முறை.

பேரூர் தாயர்எழுவர் சிற்பங்கள் முற்காலப் பாண்டியர் கலையை ஒட்டி மேலிரு கைகளில் ஏந்தியுள்ள படைக்கலன்கள் கையைவிட்டுத் தள்ளி சிறிது உயரத்தில் அமைக்கப்பட்டுள்ளன. வைஷ்ணவி மேல் வலக்கையில் ஏந்தியுள்ள சக்கரம் பிரயோகச் சக்கரமாக உள்ளது. அனைத்து சிற்பங்களும் செவ்வக பீடத்தின் மீது வலக்காலைக் குத்திட்டு, இடக்காலைப் பீடத்தில் இருத்தி அமர்ந்த நிலையில் உள்ளன. தாயர்எழுவர் சிற்பத் தொகுதியுள் சாமுண்டி சிற்பம் பேரழகு படைத்த அழகிய கலைப்படைப்பு. சாமுண்டி சடாபாரத் தலை அலங்காரத்துடனும் கோரைவாய்ப் பற்களுடனும் கபால மாலை அணிந்து அமர்ந்துள்ள பாங்கு காண்போர் கண்களுக்குப் பெருவிருந்து.

### துணை நூல்கள்

*1.* ஆர். பூங்குன்றன் - பேரூர் *(1979)*

*2.* கல்வெட்டு இதழ் *14* - நடன.காசிநாதன் - தாய்மார் எழுவர் வழிபாடு என்னும் கட்டுரை

*3.* I. K. SARMA, The Development of early Saiva Art and Architecture (1982)

——

# An Exquisite Bronze Image of Tiruvanaikka

**Natana. Kasinathan**
Director of Archaeology

An exquisite bronze image has been accidentally unearthed from a paddy field near Tiruvanaikka, when the land owner excavated earth in order to prepare bricks. How this image had come to this place is an unanswerable mystery. The paddy field where from this image was found is near a dilapidated Vishnu temple known as Rathakara Vinnagara Nayanar.

This image was for sometimes with the owner of the land. Smelling the incident, the village administrative officer Thiru R. Rajamanickam with great difficulties could recover it and handed over it to the office of the Tahsildar, Trichy. The officer is to be thanked for his sincerity and having taken timely action; otherwise Tamilnadu would have lost an excellent art piece of ancient period.

This image is of a lady, standing in tribanga pose on a Padma pita which is surmounted on a Patra pita with a female attendant standing nearby. A beautiful parrot is found perched on the right hand forearm of the main figure while her left arm in placed on the right shoulder of the attendant. The attendant appears to be bearing a cosmetic box in her right hand and holding a mirror in her left. Both the figures are found badly covered with patination and need immediate chemical cleaning and preservation.

The height and breadth of these figures are not found mentioned in the report sent to me by the Registering officer, Trichy Thiru K. Sridharan.[1]

The identification of this figure poses problem. A few figures of this type have been reported earlier and identified either as Ambika of Jain faith or Parvati of Hindu Pantheon. Considering the religious association of this area, Tiruccirappalli as Cirappalli was fame for Jains. Tiruvanaikka is fame for Saivism and Srirangam for Vaishnavism. Hence one can attempt to identify this figure either with Ambika or Parvati or a Gopika with her attendant. If it is Parvati it should have Karanda Makuta as her headgear as is found on the figure of Parvati of Thiruvengimalai.[2] But here with this figure there is no headgear but the hair is put into a knot at the back while the hair strands are curled at the ends in front. This hair style gives a pleasent look to the elongated face. The ornaments that adorn the ears appear to be Patmakundala. The other ornaments are not clear as the figure is covered with patination. The style of wearing the lower garment also indicates that this figure is not of Godess Parvati. So it may probably be of Ambika or a royal lady or a Gopika who was enchanted by the romantic sports of Lord Krishna.

This figure seems to be akin with the Ambika figures found from Senganikuppam, Aragalur in Salem District and Bapatla of Andhra pradesh.[3] The Ambika figures of Aragalur and Bapatla are found encircled by Praba with a child on either end while the Ambika of Saiganikkuppam is flanked by a

female attendant on her left and a child on her right. She is also wearing Karanda makuta on her head. But the figure of Tiruvanaikka is found with only one female attendant and without any headgear. Hence this could either be a royal lady or a Gopika.

There are some sculptures in the niches of the walls of Venugopala temple of Srirangam. These figures have been identified as Gopika by eminent art historians. Of them some of the figures are found sculpted with parrots perched on their hands. They are portrayed as if standing in self forgotten mood due to their deep love with Lord Krishna. This figure may in all probability be the personification of one such Gopika who had fallen in love with Krishna (Mayakkannan).

The findspot of this image also supports the above view as there is a vishnu temple nearby in crumbling condition. The inscription engraved on a pillar found in front of this temple refers to the endowment made to this temple by one individual Muludum Vallavan Tambiran.[4] Hence in all probability this image must have belonged to this temple.

On the basis of stylistic ground it is assignable to 12th-13th century A.D.

---

1. I was able to read the news about the discovery of this figure in a daily and immediately sent a telegram to the Registering officer, Trichy to examine the find and send a report. He responded quickly. I am thankful to him.
2. Srinivasa Desikan V.N., The Bronze Gallery, (Pub. 1983)Plate XIV.
3. Vedachalam V. 'Iyakki Vazhipadu' (Tamil)
4. The text of this inscription has been brought to my notice by Thiru A. Abdul Majeed, Deputy Superintending Archaeologist of my office.

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையின் அச்சகத்தில் அச்சிட்டு
இத்துறை இயக்குநருக்காக திருமதி நா. மார்க்சியகாந்தி